முழுப்பதிப்புரிமையுடையது

அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சை - 2023 (2024)

## 62 - குடியியற் கல்வி

### புள்ளியிடும் திட்டம்




இது விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன.

## கல்விப் பொது தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - 2023 (2024)

### 62 - குடியியற் கல்வி I, II

### இறுதிப்புள்ளிகளைக் கணித்தல்

**வினாப்பத்திரம் I**

வினாப்பத்திரம் I - $1 \times 40 = 40$ புள்ளிகள்

**வினாப்பத்திரம் II**

முதலாம் வினா மற்றும் ஏனைய நான்கு வினாக்கள் உள்ளிட்ட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

இறுதிப் புள்ளி வழங்கல்.

| | | |
|---|---|---|
| பகுதி II | 1 ஆம் வினா $02 \times 10$ | 20 புள்ளிகள் |
| | 2 ஆம் வினா 10 | 04 வினாக்களிற்கு $10 \times 04 = 40$ புள்ளிகள் |
| | 3 ஆம் வினா 10 | |
| | 4 ஆம் வினா 10 | |
| | 5 ஆம் வினா 10 | |
| | 6 ஆம் வினா 10 | |
| | 7 ஆம் வினா 10 | |

| | | |
|---|---|---|
| வினாப்பத்திரம் I | - | 40 புள்ளிகள் |
| வினாப்பத்திரம் II | - | 60 புள்ளிகள் |
| மொத்தம் | - | 100 புள்ளிகள் |

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

**අ.පො.ස (සා.පෙළ) විභාගය / க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சை - 2023 (2024)**

| විෂය අංකය<br>பாட இலக்கம் | **62** | විෂයය<br>பாடம் | **குடியியற் கல்வி** |
|---|---|---|---|

### ලකුණු දීමේ පටිපාටිය / புள்ளி வழங்கும் திட்டம்
### I පත්‍රය / பத்திரம் I

| ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. | ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. | ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. | ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 2 | 11. | 3 | 21. | 3 | 31. | 4 |
| 02. | 2 | 12. | 4 | 22. | 1 | 32. | 1 |
| 03. | 4 | 13. | 2 | 23. | 2 | 33. | 2 |
| 04. | 3 | 14. | 1 | 24. | 1 | 34. | 1 |
| 05. | 1 | 15. | 4 | 25. | 3 | 35. | 4 |
| 06. | 3 | 16. | 3 | 26. | 4 | 36. | 1 |
| 07. | 2 | 17. | 4 | 27. | 1 | 37. | 3 |
| 08. | 1 | 18. | 2 | 28. | 3 | 38. | 2 |
| 09. | 2 | 19. | 3 | 29. | 1 | 39. | 4 |
| 10. | 4 | 20. | 4 | 30. | 2 | 40. | 3 |

✪ විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் : විශේෂ
එක් පිළිතුරකට / ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் 1 x 40 = 40

# பத்திரம் II வினாக்களும் விடைகளும்

## 01 ஆம் வினாவில் எதிர்பார்க்கும் கற்றற்பேறுகள்

- ஒரு நாட்டை அரசியலமைப்புக்கேற்ப ஆட்சி செய்வதன் முக்கித்துவத்தை விளக்குவார்.
- இலங்கையில் மாகாணங்களுக்கிடையில் அதிகாரங்கள் பகிரப்பட்டுள்ள விதத்தினைப் பட்டியலிடுவார்.
- இலங்கை பன்மை கலாசார நாடாவதில் செல்வாக்கு செலுத்தியுள்ள காரணிகளை விளக்குவார்.
- சமூகத்தில் நிலவும் அடிப்படையான பொருளாதாரப் பிரச்சினைகளை விளக்குவார்.
- முரண்பாடுகள் ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை விளக்குவார்.
- நீதிமன்ற சுதந்திரத்தை ஏற்படுத்துவதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை விளக்குவார்.
- உள்ளூராட்சி மன்றங்களுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள பணிகளை ஆராய்வார்.
- உரிமைகளை வென்றெடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளை விபரிப்பார்.
- சூழல் தொகுதியின் கூறுகள் தொடர்பில் பகுப்பாய்வு செய்வார்.
- சர்வதேச தொடர்புகளை மேற்கொள்ளக்கூடிய முறைகளை விளக்குவார்.

1. (i) நாட்டை அரசியலமைப்புக்கமைய ஆட்சி செய்வதனாலேற்படும் நன்மைகள் இரண்டினை எழுதுக.
   (ii) 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் 13 வது திருத்தத்திற்கமைவாக அதிகாரங்கள் பகிரப்பட்டுள்ள பட்டியல்களில் இரண்டினைக் குறிப்பிடுக.
   (iii) பல்பண்பாட்டு சமூகத்தில் அவதானிக்கத்தக்க அடிப்படைப் பண்புகள் இரண்டினைக் குறிப்பிடுக.
   (iv) மனிதத் தேவைகளையும் எதிர்பார்ப்புக்களையும் நிறைவேற்ற முயலுகையில் எதிர்நோக்கும் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் இரண்டினைத் தருக.
   (v) மோதலேற்படுவதற்குக் காரணமான முக்கிய அடிப்படைகள் இரண்டினைக் குறிப்பிடுக.
   (vi) நீதித்துறையின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள வழிவகைகள் இரண்டினைத் தருக.
   (vii) உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பணிகளுக்கான முக்கிய தலைப்புகள் இரண்டினை எழுதுக.
   (viii) உரிமைகளை வென்றெடுப்பதற்காக ஏற்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் இரண்டினைக் குறிப்பிடுக.
   (ix) சூழல் தொகுதியின் கூறுகளில் சமூகச் சூழலுக்குரிய இரண்டு கூறுகளைத் தருக.
   (x) சர்வதேச உறவுகள் இடம் பெறும் முக்கிய முறைகள் இரண்டினைத் தருக.

(02 × 10 = 20 புள்ளிகள்)

i.

- அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படல்.
- சட்டத்தின் பாதுகாப்பு அனைவருக்கும் சமமாகக் கிடைத்தல்.
- ஆட்சியுடன் தொடர்புடைய நிறுவனங்களின் ஊடாக நாட்டுமக்கள் தமது தேவைகள் மற்றும் விருப்பு வெறுப்புக்களை நிறைவேற்றிக் கொள்ளல்.

- நீதிமன்ற சுதந்திரம் பாதுகாக்கப்படல்.
- ஆட்சியாளர்கள் தான்தோன்றித்தனமாக செயற்பட்டால் அதனை தடுக்கக் கூடியதாயிருத்தல்.
- பிரசைகளின் உரிமைகள் தொடர்பில் ஆள்வோர் ஆளப்படுவோர் ஆகிய இருசாராரும் அறிந்திருத்தல்.
- ஆட்சியின் முறைப்படியான தன்மை மற்றும் உறுதி பாதுகாக்கப்படல்.

**(மேற்குறிப்பிடப்பட்டுள்ளவற்றுள் யாதேனும் இரண்டு விடயங்களை குறிப்பிட்டிருந்தால் இரண்டு புள்ளிகளை வழங்குங்கள். மேற்குறித்த கருத்துக்களுக்கு சமமான கருத்துக்களை எழுதியிருப்பின் அவற்றையும் கருத்திற் கொள்ளுங்கள்)**

**(02 புள்ளிகள்)**

ii.

- மாகாண சபைக்குரிய அதிகாரங்கள் (I வது பட்டியல்)
- மத்திய அரசுக்குரிய அதிகாரங்கள் (II வது பட்டியல்)
- இணைந்து நிறைவேற்றும் பணிகள் (III வது பட்டியல்)

**(இப்பட்டியல்களில் ஏதேனும் இரண்டை எழுதியிருக்க வேண்டும். எழுத்தில் அல்லது இலக்கத்தில் எழுதியிருப்பின் ஒரு பட்டியலுக்கு ஒரு புள்ளி வீதம் இரண்டு புள்ளிகளை வழங்குங்கள்.)**

**(02 புள்ளிகள்)**

iii.

- பல்வேறு இனங்களைச் சேர்ந்த, பல்வேறு மத நம்பிக்கைகளையுடைய, பல்வேறு மொழிகளைப் பேசுகின்ற மக்கள் ஒன்றாக வாழ்தல்.
- ஒவ்வொரு கலாசாரத்திற்கும் உரித்தான பழக்க வழங்கங்கள், மரபுகள் மற்றும் பண்பாட்டு அடிப்படைகள் காணப்படல்.
- ஒரே இனக் குழுவினராக இருந்தபோதிலும் பிரதேச ரீதியான வேறுபாட்டைக் காணமுடிதல்.
- உலக நாடுகளில் வாழும் மக்கள் இனரீதியாகத் தமது நாட்டு எல்லையைத் தாண்டிச் சென்று வேறு இனங்களுடன் கலந்து காணப்படல்.
- முழு உலகமும் ஒரு கிராமமாகச் சுருங்கியிருத்தல்.
- கலாசாரச் சங்கமங்கள் நிகழ்தல்.

**(இவ்விடைகள் தனித்தனியே குறிப்பிடப்பட்டிருப்பினும் புள்ளிகளை வழங்குங்கள். மேலே குறிப்பிட்ட விடயங்களில் இரண்டை எழுதியிருக்க வேண்டும். ஒரு விடயத்திற்கு ஒரு புள்ளி வீதம் சரியான விடைகளுக்கு இரண்டு புள்ளிகளை வழங்குங்கள்.)**

**(02 புள்ளிகள்)**

iv.

- எதனை, எந்தளவு உற்பத்தி செய்வது?
- எவ்வாறு உற்பத்தி செய்வது?
- யாருக்காக உற்பத்தி செய்வது?

**மேலுள்ள அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளை எழுதியிருப்பின் ஒரு விடயத்திற்கு ஒரு புள்ளி வீதம் சரியான விடைகளுக்காக இரண்டு புள்ளிகளை வழங்குங்கள். எதனை? எந்தளவு? என தனித்தனியே எழுதியிருப்பினும் சரியான விடையாகக் கருதுங்கள். அத்தோடு எதனை? எந்தளவு? எவ்வாறு? யாருக்காக? என எழுதியிருப்பினும் புள்ளிகளை வழங்குங்கள்.** **(02 புள்ளிகள்)**

v.

- இனப்பாகுபாடு
- அரசியல்
- சமூகப் பொருளாதார நிலை
- சமயக் கொள்கைகள்

**மோதல் எற்படுவதற்கான இம்மூலங்களில் இரண்டை எழுதியிருக்க வேண்டும். ஒரு விடயத்திற்கு ஒரு புள்ளி வீதம் சரியான விடைகளுக்கு இரண்டு புள்ளிகளை வழங்குங்கள். சமூக மற்றும் பொருளாதாரம் என இரு விடயங்களாக எழுதியிருப்பினும் சரியான விடையாகக் கருதுங்கள்.**

vi. **(02 புள்ளிகள்)**

- நீதிபதிகள் சனாதிபதியால் நியமிக்கப்படல்
- நீதிபதிகளின் வேதனம் பொது நிதியிலிருந்து செலுத்தப்படல்
- நீதிபதிகளை பதவி நீக்கம் செய்வது தொடர்பில் விசேட ஏற்பாடுகள் காணப்படல்
- வேறு பதவிகளை ஏற்றுக்கொள்ள முடியாது
- தேவையற்ற தலையீடுகளைக் குறைத்தல்
- நீதிச்சேவை ஆணைக்குழு ஒன்றினை அமைத்தல்

**மேற்குறிப்பிட்ட விடயங்களில் இரண்டை குறிப்பிடல் வேண்டும். விபரங்கள் இன்றி பாடநூலில் எழுதியிருப்பது போல் எழுதியிருப்பினும் சரியான விடையாகக் கருதுங்கள்.**

**(02 புள்ளிகள்)**

vii.

- பொது வீதிகள்
- பொதுச் சுகாதாரம்
- பொதுப் பயன்பாட்டுச் சேவைகள்

**இவற்றில் இரண்டை எழுதியிருக்க வேண்டும். (02 புள்ளிகள்)**

viii.

- கி.பி. 1215 – பிரித்தானிய மக்னா காட்டா உடன்படிக்கை
- கி.பி. 1689 – பிரித்தானிய மனித உரிமைகள் பற்றிய பிரகடனம்
- கி.பி. 1776 – அமெரிக்காவின் சுதந்திரப் பிரகடனம்
- கி.பி 1789 – மனிதன் மற்றும் பிரசைகளின் உரிமை தொடர்பான பிரான்சியப் பிரகடனம்
- கி.பி. 1917 – இரஸ்யப் புரட்சி

**இவ்விடைகளில் ஏதேனும் இரண்டை எழுதியிருப்பின் சரியெனக் கருதி புள்ளிகளை வழங்குங்கள். வருடத்தை குறிப்பிடுவது கட்டாயமானதன்று.**

**(02 புள்ளிகள்)**

ix.

- பல்லினத்தன்மை
- மதம்
- சாதி
- பாரம்பரியம்
- ஒழுக்க விழுமியம்
- உரிமைகளும் கடமைகளும்
- பொறுப்புகள் மற்றும் வகைகூறல்
- சட்ட ரீதியான சம்பிரதாயங்கள்
- குடும்பம்

**மேலுள்ள விடயங்களில் இரண்டை எழுதியிருக்க வேண்டும். ஒரு சரியான விடைக்கு ஒரு புள்ளி வீதம் இரண்டு புள்ளிகளை வழங்குங்கள். கடமை, உரிமை, பொறுப்புக்கள், வகைகூறல் என்பவற்றை தனித்தனியே எழுதியிருப்பினும் சரியெனக் கருதுங்கள்.**

**(02 புள்ளிகள்)**

x.

- அரச தொடர்புகள் / அமைதிவழி தொடர்புகள் (இராஜதந்திர உறவுகள்)
- யுத்த வழி தொடர்புகள் (விரதியல் / இராணுவ ரீதியான உறவுகள்)

**இவ்விடயங்கள் இரண்டையும் எழுதியிருக்க வேண்டும். ஒரு விடயத்திற்கு ஒரு புள்ளி வீதம் வழங்குங்கள்.**

**(02 புள்ளிகள்)**

**(1ஆம் வினாவுக்கான மொத்தப் புள்ளிகள் 20 ஆகும்)**

**ஆம் வினாவில் எதிர்பார்க்கும் கற்றற்பேறுகள்**

- சட்டத்தின் தோற்றத்திற்கான மூலங்களை விவரிப்பார்.
- பிரதம நீதியரசரின் பணிகள் மற்றும் அதிகாரங்களை தெளிவுபடுத்துவார்.
- சட்டத்தின் ஆட்சியில் காணப்படும் பண்புகளை விவரிப்பார்.
- சட்டத்தின் ஆட்சியின் செயற்பாடுகளை தெளிவுபடுத்துவார்.

2. நாட்டில் சட்டத்தை நியாயமாகவும் முறையாகவும் அமுல்படுத்தினால் சமூகம் இயல்பாகவே சட்டத்திற்கு மதிப்பளிக்கும்.

(i) சட்டம் தோன்றுவதில் செல்வாக்குச் செலுத்தும் இரண்டு சட்டம் சார்ந்த மூலாதாரங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) பிரதம நீதியரசரால் ஒழுங்குவிதிகள் இயற்றப்படும் துறைகள் மூன்றினைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) (*a*) சட்டத்தின் ஆட்சி நிலவும் சமூகத்தில் அவதானிக்கத்தக்க பண்புகள் இரண்டினை எழுதுக. (02 புள்ளிகள்)

(*b*) மேலே குறிப்பிட்ட ஏதேனுமொரு பண்பு இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் விதத்தினை விளக்குக. (03 புள்ளிகள்)

- அரசியலமைப்பு
- பல்வேறு கட்டளைச் சட்டங்கள்
- நீதிமன்றத் தீர்ப்புகள்
- சட்ட வல்லுநர்களின் கருத்துக்கள்
- சித்தாந்தங்கள்
- பழக்க வழக்கங்கள்
- மதம்

**இவற்றில் ஏதேனும் இரண்டு விடயங்களை எழுதியிருக்க வேண்டும். ஒரு சரியான விடைக்கு ஒரு புள்ளி வீதம் இரண்டு புள்ளிகளை வழங்குங்கள். (02 புள்ளிகள்)**

- மேன் முறையீடுகளை ஏற்றுக்கொள்ளல்
- மேன் முறையீடுகளை விசாரித்தல்
- மேன் முறையீடுகளை நிராகரித்தல்
- பிணை வழங்குதல்
- வழக்கு நடவடிக்கைகளை நிறுத்துதல்
- சட்டத்தரணி தொழில் தொடர்பான நடவடிக்கைகள்
- ஜூரி சபை தொடர்பான நடவடிக்கைகள்
- பிஸ்கால் உத்தியோகத்தர் தொடர்பான நடவடிக்கைகள்
- நீதிமன்ற விதிகளை மறுசீரமைத்தல், மாற்றியமைத்தல்
- நீதிமன்றம் தொடர்பான புதிய விதிகளை ஏற்படுத்தல்

**பிரதம நீதியரசர் விதிகளை ஏற்படுத்தக்கூடிய துறைகள் இவையாகும். இதிலிருந்து ஏதேனும் மூன்றை எழுதியிருக்க வேண்டும். ஒரு சரியான விடைக்கு ஒரு புள்ளி வீதம் மூன்று புள்ளிகளை வழங்குங்கள். (03 புள்ளிகள்)**

iii.

(அ)

- நீதித்துறை சுதந்திரமாகச் செயற்படல்
- சட்டம் தொடர்பில் சகல பிரசைகளும் அறிந்திருத்தல்
- நேர்மையாகவும் தாமதமின்றியும் நீதியைப் பெற்றுக்கொள்ளல்
- சட்டத்தின் முன் அனைவரும் சமமாக மதிக்கப்படுதல்
- நீதிபதிகள் தீர்ப்புகளில் தலையீடுகள் இல்லாதிருத்தல்

**சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்த இவை அவசியமாகும். இவற்றில் இரண்டைச் சரியாக எழுதியிருப்பி ஒரு விடயத்திற்கு ஒரு புள்ளி வீதம் இரண்டு புள்ளிகளை வழங்குங்கள். அவ்வாறான கருத்து புலப்படு வகையில் எழுதியிருப்பினும் சரியான விடையாகக் கருதுங்கள்.**

**உதா: மிகத் துரிதமாக நியாயமாக வழக்கைத் தீர்த்தல் (02 புள்ளிகள்)**

(ஆ)

**மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் ஒன்றைத் தெரிவு செய்து இலங்கையில் அதனை காணமுடிகின்றத என்பதை உதாரணத்துடன் தெளிவுபடுத்த வேண்டும். பொருத்தமான உதாரணம் கொண்டு விவரித்திருப்பி மூன்று புள்ளிகளை வழங்குங்கள். (03 புள்ளிகள்)**

**(02ஆம் வினாவுக்கான மொத்தப் புள்ளிகள் 10 ஆகும்)**

**3 ஆம் வினாவில் எதிர்பார்க்கும் கற்றற்பேறுகள்**

- அரசாங்கம் ஒன்றின் பிரதான நிறுவனங்களைத் தெளிவுபடுத்துவார்.
- சனநாயக ஆட்சியில் காணப்படும் பண்புகளைப் பகுத்தாய்வார்.
- நேரடி சனாநாயகத்தை நடைமுறைப்படுத்த முடியாமைக்கான காரணங்களை மதிப்பீடு செய்வார்.
- நேரடி சனநாயகத்தை நடைமுறைப்படுத்த எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை விவரிப்பார்.

3. நேரடியாக அன்றேல் மறைமுகமாக ஆட்சி நடவடிக்கைகளில் பொது மக்கள் பங்குபற்றுவதற்கு வாய்ப்பளிக்கும் ஆட்சி முறை சனநாயக ஆட்சி முறையாகும்.

(i) அரசாங்கத்தில் அவதானிக்கத்தக்க முக்கிய நிறுவனங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) சனநாயக ஆட்சியில் அவதானிக்கத்தக்க பண்புகள் மூன்றினைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) (*a*) தற்காலத்தில் நேரடி சனநாயக முறையை நடைமுறைப்படுத்துவது சிக்கலாக இருப்பதற்கான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(*b*) அவற்றுள் ஏதேனுமொரு காரணத்தை இழிவளவாக்குவதற்கு மேற்கொள்ளக்கூடிய வழிவகைகள் மூன்றினை விளக்குக. (03 புள்ளிகள்)

- நிறைவேற்றுத்துறை
- சட்டத்துறை
- நீதித்துறை

**இந்நிறுவனங்களில் இரண்டை எழுதியிருக்க வேண்டும். ஒழுங்குமுறையில் எழுதியிருக்க வேண்டிய அவசியம் இல்லை. ஒரு சரியான விடைக்கு ஒரு புள்ளி வீதம் இரண்டு புள்ளிகளை வழங்குங்கள்.**

**(02 புள்ளிகள்)**

- சர்வசன வாக்குரிமையின் மூலம் அரசாங்கமும் ஆட்சியாளர்களும் தெரிவுசெய்யப்படல்
- போட்டிக் கட்சிமுறை காணப்படல்
- தேர்தல் தொகுதிகள் நடைமுறையில் இருத்தல்
- சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்கள் நடைபெறல்
- ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி காணப்படல்
- சுதந்திரம், சமத்துவம் மற்றும் உரிமைகள் பாதுகாக்கப்படல்
- அரசியல் யாப்புக்கு ஏற்ப செயற்படல்
- ஊடக சுதந்திரம் மற்றும் தகவல் அறிவதற்கான உரிமை காணப்படல்
- நீதித்துறையின் சுதந்திரம் காணப்படல்
- சட்டத்தின் ஆட்சியும் மற்றும் சட்டத்தின் முன் சமத்துவமும்

**இவற்றில் ஏதேனும் மூன்று விடயங்களை எழுதியிருக்க வேண்டும். இதற்கு சமமான கருத்து புலப்படும் கருத்துக்களையும் சரியான விடைகளாகக் கருதுங்கள். ஒரு சரியான விடைக்கு ஒரு புள்ளி வீதம் மூன்று புள்ளிகளை வழங்குங்கள்.**

**(03 புள்ளிகள்)**

iii.

(அ)

- அரசிற்குரிய நிலம் விசாலமானதாகக் காணப்படல்
- அதிக சனத்தொகையைக் கொண்டிருத்தல்
- எல்லா பிரசைகளையும் ஓரிடத்தில் ஒன்றுகூட்டுவதில் உள்ள சிரமம்
- சமூக தேவைகளின் சிக்கல் தன்மை
- பல்வேறு அரசியல் கருத்தியல்கள் காணப்படல்

இவ்வாறான காரணங்கள் இரண்டினை குறிப்பிட்டிருக்க வேண்டும். இதற்குச் சமமான வேறு கருத்துக்களை எழுதியிருப்பின் அதனையும் கருத்திற் கொள்ளுங்கள்.

உதாரணம் : பல்வேறு இனங்கள் வாழ்தல் போன்றன. ஒரு விடைக்கு ஒரு புள்ளி வீதம் இரு புள்ளிகளை வழங்குங்கள். (02 புள்ளிகள்)

(ஆ)

இங்கு மறைமுக சனநாயகத்தை பின்பற்ற முடியும்.

நாட்டை சிறிய பகுதிகளாக பிரித்து ஆட்சி செய்தல், இலங்கையின் உள்ளூராட்சி நிறுவனங்கள், மாகாண சபைகள், அமெரிக்காவில் பின்பற்றப்படும் தேர்தல் முறை போன்றவற்றை உதாரணங்களாகக் காட்ட முடியும். விடையின் சரியான தன்மைக்கு ஏற்ப புள்ளிகளை வழங்குங்கள். ஒரு முறையினை விளக்கியிருப்பது போதுமானதாகும்.

(03 புள்ளிகள்)

(3ஆம் வினாவுக்கான மொத்தப் புள்ளிகள் 10 ஆகும்)

**4 ஆம் வினாவில் எதிர்பார்க்கும் கற்றற்பேறுகள்**

- பன்மை கலாசார சமூகமொன்றில் காணப்படக்கூடிய பண்புகளை விவரிப்பார்.
- இலங்கை ஒரு பன்மை கலாசார நாடு என்பதற்கான காரணங்களை விவரிப்பார்.
- நல்லாட்சியை நடைமுறைப்படுத்துவதன் மூலம் மக்களுக்கு கிடைக்கக்கூடிய பயன்களை ஆராய்வார்.
- பன்மை கலாசார சமூகமொன்றில் ஏற்படக்கூடிய பயன்கள் நன்னிலைப்பிற்கு பங்களிக்கும் விதத்தை கலந்துரையாடுவார்.

4. பன்மொழிகளைப் பேசுகின்ற பன் மதங்களைப் பின்பற்றுகின்ற, பல்வேறு மரபுகளையும் பழக்கவழக்கங்களையும் பேணுகின்ற மக்கள் ஒன்றாக வாழ்தலை பன்மைப்பண்பாட்டு சமூகம் எனலாம்.

(i) இலங்கையில் பன்மைப்பண்பாட்டுச் சமூகம் உருவாவதில் செல்வாக்குச் செலுத்திய காரணியான குடிப்பெயர்வுக்கான உதாரணங்கள் இரண்டினைத் தருக. (02 புள்ளிகள்)

(ii) மாணவராக நீங்கள் இரண்டாம் மொழியைக் கற்பதனால் அடையும் பயன்கள் மூன்றினை எழுதுக. (03 புள்ளிகள்)

(iii) (*a*) பன்மைப்பண்பாட்டுச் சமூகத்தில் நல்லாட்சி நடைபெறுவதால் மக்கள் அடையும் நன்மைகள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(*b*) அவற்றுள் ஏதேனுமொன்று சமூக நன்மைக்கு ஏதுவாயமையும் விதத்தைச் சுருக்கமாக விவரிக்குக. (03 புள்ளிகள்)

- விஜயனும் தோழர்களும் வருகை தந்தமை
- விஜயனின் முடிசூட்டலுக்கு மதுராபுரி இளவரசி வருகை தந்தமை
- பண்டுவாசுதேவனும் குழுவினரும் வருகை தந்தமை
- பத்தகச்சானாவும் சகோதரக் குழுவினரும் வருகை தந்தமை
- மகிந்த தேரரும் மதத்தூதுக் குழுவினரும் வருகை தந்தமை
- சங்கமித்தை பிக்குணியும் குழுவினரும் வருகை தந்தமை
- சுற்றுலா நடவடிக்கை, வேலைவாய்ப்பு, கல்வி போன்ற பல்வேறு நோக்கங்களுக்காக தற்போது குடிப்பெயர்வு இடம்பெறுகிறது.

**மேற்குறித்த விடயங்களில் இரண்டை எழுதியிருக்க வேண்டும். ஒரு விடயத்திற்கு ஒரு புள்ளி வீதம் இரண்ட புள்ளிகளை வழங்குங்கள் (02 புள்ளிகள்)**

- இனங்களுக்கிடையில் ஒற்றுமை விருத்தியடைதல்
- சர்வதேச தொழில் சந்தைக்குள் பிரவேசிக்க முடிகின்றமை
- வேறு இனங்களின் கலாசாரத்திற்கு மதிப்பளிக்க முடிகின்றமை
- வேறு இனங்களின் கலாசாரங்களை விளங்கிக் கொள்ள முடிகின்றமை
- இனங்களுக்கிடையில் நம்பிக்கை கட்டியெழுப்பப்படல்

- புதிய உறவுகள் ஏற்படல்
- பூகோளப் பிரசையாக செயற்படுவதற்கான திறன் விருத்தியடைதல்
- உலக அறிவினை இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடிகின்றமை
- தேச எல்லைகளைக் கடந்து சிந்திக்கக்கூடியவராக மாறுதல்

**இவ்வாறான மூன்று விடயங்களை எழுதியிருக்க வேண்டும். ஒரு சரியான விடைக்கு ஒரு புள்ளி வீதம் மூன்று புள்ளிகளை வழங்குங்கள்.**

**(03 புள்ளிகள்)**

iii.

(அ)

- பன்மைச் சமூகம் மற்றும் பன்மைத்துவ இனக்குழுக்களுக்கிடையில் நம்பிக்கை உறுதிப்படுத்தப்படல்.
- ஒவ்வொருவருக்கிடையிலும் புரிந்துணர்வு விருத்தியடைதல்.
- ஆட்சி நடவடிக்கையில் எல்லா இனக்குழுக்களினதும் பங்குபற்றல் விருத்தியடைதல்.
- ஒருவருக்கொருவர் மதிப்பளித்தல்.
- மத மற்றும் கலாசார பன்மைத்தன்மையைக் கருத்திற்கொள்ளாது நல்லிணக்கம் விருத்தியடைதல்.
- சட்டத்தை மதிக்கும் பிரசையாக வாழ்வதற்கு பழக்கப்படுதல்.
- வெளிப்படைத்தன்மையுடன் செயற்படல்.

**இவ்விடை அல்லது இதற்கு சமமான கருத்து காணப்படும் விடயங்கள் இரண்டு எழுத வேண்டும். சரியான ஒரு விடைக்கு ஒருபுள்ளி வீதம் இரண்டு புள்ளிகளை வழங்குங்கள்.**

**(02 புள்ளிகள்)**

(ஆ)

**மேலுள்ள விடைகளில் ஒன்று சமூக நிலைப்பிற்கு பங்களிக்கும் விதத்தினை விவரித்து இருப்பின் பொருத்தமானவாறு புள்ளிகளை வழங்குங்கள்.**

**உதாரணம் : சமூகத்தின் சமாதானம், ஒற்றுமை விருத்தியடைந்து அனைத்து உறுப்பினர்களுக்கும் மகிழ்ச்சியுடன் வாழ முடியும் என்பது, மாணவர்கள் இது தொடர்பில் ஆக்கபூர்வமாக எழுதியிருக்கும் விடைகளுக்கு மூன்று புள்ளிகளை வழங்குங்கள்.**

**(03 புள்ளிகள்)**

**(04ஆம் வினாவுக்கான மொத்தப் புள்ளிகள் 10 ஆகும்)**

**5 ஆம் வினாவில் எதிர்பார்க்கும் கற்றற்பேறுகள்**

- சமூகத்தில் ஏற்படக்கூடிய பல்வேறு வகையான மோதல்களைப் பெயரிடுவார்.
- மோதலை தீர்த்துக்கொள்வதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை ஆராய்ந்து பார்ப்பார்.
- மோதல் தீர்வில் நடுநிலையாளரிடம் காணப்பட வேண்டிய பண்புகளை விவரிப்பார்.
- மோதலைத் தவிர்த்துக் கொள்வதற்காக பிரசையாக பயின்றுகொள்ள வேண்டிய பண்புகளைத் தெளிவுபடுத்துவார்.

5. மனித மனதில் உருவாகும் நோக்கங்கள், நலன்கள் மற்றும் தேவைகளின் பல்வகைமைக்கேற்ப மோதல் ஏற்படலாம்.

(i) அரசினுள் அல்லது இரண்டு அரசுகளுக்கிடையே ஏற்படத்தக்க மோதல்களுக்கு இரண்டு உதாரணங்கள் தருக. (02 புள்ளிகள்)

(ii) நடுநிலையாளரைத் தெரிவுசெய்கையில் விசேடமாகக் கருத்திற்கொள்ளவேண்டிய விடயங்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) (*a*) மோதல் தீர்வின் போது பிரசையொருவர் கொண்டிருக்க வேண்டிய தனியாள் பண்புகள் இரண்டினை எழுதுக. (02 புள்ளிகள்)

(*b*) அவற்றுள் ஒரு பண்பின் மூலம் மோதலைத் தீர்க்கும் விதத்தினைச் சுருக்கமாக விளக்குக. (03 புள்ளிகள்)

i.

- தேச எல்லை
- வளங்களைப் பகிர்ந்து கொள்ளல்
- அரசியல் காரணமாக ஏற்படும் கருத்தியல்கள்

உதாரணம் : இரஸ்யா உக்ரேன் யுத்தம், இஸ்ரேல் பாலஸ்தீன முரண்பாடு, இலங்கையில் காணப்பட்ட யுத்தம் என்பவற்றைக் குறிப்பிட முடியும்.

**உதாரணம் குறிப்பிட்டிருப்பது முக்கியமானதாகும். உதாரணமின்றி மேலுள்ள விடயங்களை மாத்திரம் குறிப்பிட்டிருப்பின் ஒரு புள்ளி மாத்திரம் வழங்குங்கள். உதாரணம் குறிப்பிடப்பட்டிருப்பின் ஒரு விடயத்திற்கு ஒரு புள்ளி வீதம் இரண்டு புள்ளிகளை வழங்குங்கள். உதாரணமாக கடந்தகால சம்பவங்களை குறிப்பிட்டிருப்பினும் சரியெனக் கருதுங்கள். (2 புள்ளிகள்)**

ii.

- இரு தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நடுநிலையான நபராக இருத்தல்.
- மோதல் பற்றி முழுமையான விளக்கத்தைப் பெற்றிருத்தல்.
- தனது முடிவை அல்லது தீர்ப்பை மோதல் தரப்பினர் மீது திணிக்காதிருத்தல்.
- இரு தரப்பினர் மீதும் செல்வாக்குச் செலுத்தாதிருத்தல்.
- இரு தரப்பினரினதும் சம்மதத்துடன் தீர்வை நோக்கி வழிநடாத்துதல்.
- நேரடியாகச் சந்திக்க முடியாத கட்டங்களில் தனித்தனியாக அவர்களை சந்தித்துக் கருத்துக்களைப் பெற்று இருதரப்பினரிடமும் செய்தியை எடுத்துரைத்தல்.
- நெகிழ்வான தீர்ப்பினை பெற்றுக்கொள்ள வழிவகை செய்து வெற்றியைப் பெற்றுக்கொடுத்தல்.

**மேற்குறிப்பிட்ட வகையில் இணக்கப்பாட்டாளரை தெரிவு செய்யும்போது கருத்திற் கொள்ள வேண்டியவாறு கருத்துக்களை எழுதியிருக்க வேண்டும். இக்கருத்தினை வேறு வகையில் எழுதியிருப்பினும் சரியான விடையாகக் கருதுங்கள். இணக்கப்பாட்டாளரிடம் காணப்படவேண்டிய பண்புகளை எழுதியிருப்பினும் சரியான விடையாகக் கருதுங்கள். ஒரு சரியான விடைக்கு ஒரு புள்ளி வீதம் மூன்று புள்ளிகளை வழங்குங்கள். (03 புள்ளிகள்)**

iii.

(அ)

- புரிந்துணர்வு
- பொறுமை
- கருணை
- அனுதாபம்
- ஆக்கபூர்வமான சிந்தனை
- தெளிவாக முடிவெடுத்தல்
- தாங்கும் சக்தி ஃ சகிப்புத் தன்மை
- பயனுள்ள தொடர்பாடல்
- உணர்வுபூர்வமாதல்
- அகிம்சை

**மேற்குறிப்பிட்ட விடயங்களில் ஏதேனும் இரண்டை எழுதியிருக்க வேண்டும். ஒரு சரியான விடைக்கு ஒரு புள்ளி வீதம் இரண்டு புள்ளிகளை வழங்க முடியும்.**

**(02 புள்ளிகள்)**

(ஆ)

**மாணவராக தான் முகங்கொடுக்கும் மோதலைத் தீர்த்துக்கொள்ளும்போது அவர் பின்பற்றிய குணாம்சம் ஒன்றைக் குறிப்பிட்டிருக்க வேண்டும். அப்பண்பின் மூலம் மோதலை தீர்த்துக்கொண்ட விதம் என்பவற்றை விவரித்திருக்க வேண்டும். விடையின் சரியான தன்மை ஆக்கபுர்வம் மற்றும் நடைமுறைச் சாத்தியம் என்பவற்றைக் கவனத்திற் கொள்ளுங்கள்.**

**(03 புள்ளிகள்)**

**(5ஆம் வினாவுக்கான மொத்தப்புள்ளிகள் 10)**

**6 ஆம் வினாவில் எதிர்பார்க்கும் கற்றற்பேறுகள்**

- மனித உரிமைகள் பற்றிய விடயங்களை ஆய்வு செய்வார்.
- சிவில் மற்றும் அரசியல் உரிமைகளை விவரிப்பார்.
- பெண்கள் உரிமைகள் பற்றிய மதிப்பீட்டை மேற்கொள்வார்.
- சிறுவர் உரிமைகள் பற்றிய விடயங்களை விவரிப்பார்.
- சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளை தெளிவுபடுத்துவார்.
- பாடசாலை மாணவர் ஒருவரின் கடமைகளை ஆய்வு செய்வார்.

6. மனிதர்கள் மாண்புடனும் சமத்துவத்துடனும் சமூகத்தில் வாழ்வதற்கு மனிதவுரிமைகள் உதவுகின்றன.

(i) குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச சமவாயங்கள் (ICCPR) மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள இரண்டு உரிமைகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) பெண்களுக்கெதிரான அனைத்து வகை பாரபட்சங்களையும் ஒழித்துக்கட்டும் முகமாக ஏற்படுத்தப்பட்ட சமவாயத்திற்கமைவாக (CEDAW) பெண்களுக்குரித்தான உரிமைகள் மூன்றினைத் தருக. (03 புள்ளிகள்)

(iii) (*a*) சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுள்ள வழிவகைகள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(*b*) பாடசாலை மாணவராக நீங்கள் நிறைவேற்ற வேண்டிய கடமைகள் மூன்றினை சுருக்கமாக விளக்குக. (03 புள்ளிகள்)

i.

- வாழ்வதற்கான உரிமை
- சித்திரவதைக்கு உள்ளாகாதிருப்பதற்கான உரிமை
- பலவந்தமாக கைதுசெய்யப்படாமல் இருப்பதற்கான உரிமை
- தனிப்பட்ட ரீதியில் சட்டத்தின் முன் நிற்பதற்கான உரிமை
- உரிமைகளில் தாக்கம் செலுத்தும் தண்டனைகளில் இருந்து விலகியிருப்பதற்கான உரிமை
- தனிப்பட்ட சுதந்திரம் மற்றும் பாதுகாப்பிற்கான உரிமை
- அடிமைத்தனத்தில் இருந்து விடுபடுவதற்கான உரிமை
- நீதியான வழிகாட்டலுக்கான உரிமை
- மதத்தினை பின்பற்றுவதற்கான உரிமை
- அமைதியாக ஒன்றுகூடுவதற்கான உரிமை
- தேர்தல்களில் வாக்களிப்பதற்கான உரிமை
- தேர்தல்களில் தெரிவுசெய்யப்படுவதற்கான உரிமை
- மக்கள் பிரதிநிதியாக தெரிவுசெய்யப்படுவதற்கான உரிமை

**மேலுள்ள விடயங்களில் எவையேனும் இரண்டினை எழுதியிருத்தல் அவசியமாகும். இக்கருத்து புலப்படும் வகையில் எழுதப்பட்டிருக்கும் விடைகளையும் சரியெனக் கருதுங்கள். சரியான விடை ஒன்றுக்கு ஒரு புள்ளி வீதம் இரு புள்ளிகளை வழங்குங்கள்.** **(02 புள்ளிகள்)**

ii.

- பெண்களின் குடியியல் மற்றும் அரசியல் உரிமை
- குடும்ப அலகினுள்ளே பெண்களின் உரிமை
- கல்வியும், பயிற்சியும் பெறுவதற்கான உரிமை
- பொருளாதாரத்திற்கும் அதன் பிரதி பலன்களைப் பெறுவதற்குமான உரிமை
- சுகாதாரப் பாதுகாப்பிற்கும் போசாக்கிற்குமான உரிமை
- சமூக வேற்றுமைகளில் இருந்து பாதுகாப்பு பெறுவதற்கான உரிமை

**மேற்குறிப்பிட்ட விடயங்களில் ஏதேனும் மூன்றை எழுதியிருக்க வேண்டும். இக்கருத்து வெளிப்படும் வகையில் மாணவர்களின் மொழிநடையில் எழுதியிருப்பினும் அதனையும் சரியான விடையாகக் கருதுங்கள். சரியான விடையொன்றுக்கு ஒரு புள்ளி வீதம் மூன்று புள்ளிகளை வழங்குங்கள்.**

**(03 புள்ளிகள்)**

iii.

(அ)

- ஐக்கிய நாடுகள் தாபனத்தின் சிறுவர் உரிமைகள் சமவாயத்தை ஏற்று நடைமுறைப்படுத்தல்.
- சிறுவர் தொடர்பில் பணியாற்றும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் சிறுவர்களுக்கு உச்ச பயன் கிடைக்கும் வகையில் செயற்படல்.
- சட்டவாக்கத்தை சிறுவர் உரிமை சமவாயத்திற்கு இணங்க மேற்கொள்ளல்.
- தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை ஒன்றை தாபித்துள்ளமை
- சிறுவர்களின் முறைப்பாடுகளை விசாரிப்பதற்கான தனியான அலகொன்றினை தாபித்துள்ளமை.
- சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் நேரடி தொலைபேசி இலக்கம் (1929) ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளமை.
- பிறப்புச் சான்றிதழ் இன்றியும் பாடசாலைக்குள் அனுமதிப்பதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளமை.

**இவ்விடயங்களில் ஏதெனும் இரண்டை எழுதுதல் வேண்டும். இக்கருத்து புலப்படும் வகையில் எழுதப்பட்டுள்ள விடயங்களைச் சரியான விடையாகக் கருதுங்கள். சரியான விடைக்கு ஒரு புள்ளி வீதம் இரண்டு புள்ளிகளை வழங்குங்கள்.**

**(02 புள்ளிகள்)**

(ஆ)

- கல்வியை உரியவாறு பெற்றுக் கொள்ளல்.
- இயலுமைகளையும் திறன்களையும் விருத்தி செய்து கொள்ளல்.
- நற்பிரசையாக பழக்கப்படுதல்.
- ஆசிரியருக்கு கீழ்ப்படிதல்
- ஒழுக்கம் பேணல்
- பாடசாலையின் சட்ட திட்டங்கள் மற்றும் சம்பிரதாயங்களைப் பாதுகாத்தல்.
- பாடசாலையின் வளங்களைப் பாதுகாத்தல்.

**மேற்குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் மூன்றைத் தெரிவு செய்து அதனைச் சுருக்கமாக தெளிவுபடுத்தியிருத்தல் வேண்டும். விடயத்தை மட்டும் குறிப்பிட்டிருப்பின் ஒரு புள்ளியை வழங்குங்கள். குறிப்பிட்டு விளக்கியிருப்பின் முழுப்புள்ளிகளையும் வழங்குங்கள்.**

**(03 புள்ளிகள்)**

**(6ஆம் வினாவுக்கான மொத்தப்புள்ளிகள் 10)**

**7 ஆம் வினாவில் எதிர்பார்க்கும் கற்றற்பேறுகள்**

- இயற்கை நிகழ்வுகளால் சூழலுக்கு ஏற்படும் பாதிப்புகளை விவரிப்பார்.
- நீர் மாசடையும் சந்தர்ப்பங்களை தெளிவுபடுத்துவார்.
- நீர் மாசடைதலை தவிர்த்துக்கொள்ளும் விதத்தினை தெளிவுபடுத்துவார்.
- நீர் மாசடைவதால் ஏற்படும் பிரச்சினைகளை ஆய்வு செய்வார்.

7. எம்மைச் சூழவுள்ள உயிருள்ள, உயிரற்ற அனைத்தும் சூழலுக்குரியதாகையினால் சூழலைப் பாதுகாத்தல் மனித நிலவுகைக்கு காரணமாகின்றது.

(i) இயற்கை நிகழ்வுகளால் சூழலுக்கு ஏற்படும் பாதிப்புகள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) நீர் மாசடைவதற்கான காரணிகள் மூன்றினைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) (*a*) நீர் மாசடைதலைத் தவிர்ப்பதற்கு நீங்கள் கடைப்பிடிக்க வேண்டிய வழிவகைகள் இரண்டினை எழுதுக. (02 புள்ளிகள்)

(*b*) நீர் மாசடைவதால் ஏற்படும் பிரச்சினைகள் மூன்றினை விளக்குக. (03 புள்ளிகள்)

- நிலச்சரிவு
- புவியதிர்வு
- எரிமலை வெடிப்பு
- காட்டுத்தீ
- பனி மலைச் சரிவு / உருகுதல்
- வெள்ளப்பெருக்கு
- வறட்சி
- சுனாமி
- சூறாவளி

**இவற்றில் ஏதேனும் இரண்டை எழுதியிருப்பின் ஒன்றுக்கு ஒரு புள்ளி வீதம் இரண்டு புள்ளிகளை வழங்குங்கள்.**

**(02 புள்ளிகள்)**

- கைத்தொழில்கள் மூலம்
- விவசாய நடவடிக்கைகள் மூலம்
- இயற்கைக் காரணிகள் மூலம்
- வீட்டுக் கழிவுகள்
- வாகனக் கழிவுகள்
- அமில மழை பொழிதல்
- இரத்தினக்கல் அகழ்வு

**இவ்வாறான விடைகளை எழுதியிருக்க முடியும். அவ்வாறான பொருத்தமான விடைகளை கருத்திற்கொண்டு புள்ளிகளை வழங்குங்கள். மூன்று விடயங்கள் எழுதியிருப்பது அவசியமாகும்.**

**(03 புள்ளிகள்)**



[ Downloaded from Past Papers Wiki - Most Extensive Wikipedia of Past Papers! ]

iii.

(அ)

- மக்களை தெளிவூட்டல்
- நீர் மூலங்களை மாசுமடுத்தும் நபர்கள் தொடர்பில் உரிய அதிகாரிகளுக்கு அறிவித்தல்.
- கைத்தொழில் கழிவுகளை மீள்சுழற்சிக்கு உட்படுத்துமாறு தெளிவூட்டல்.
- வாகனங்களை கழுவும் நீரை நீர் மூலங்களுடன் கலக்கவிடாதிருத்தல்.
- மாசடைந்த நீரை நீர் மூலங்களுடன் கலக்கவிடாதிருத்தல்.
- குப்பை கூழங்களை நீர் மூலங்களுடன் கலக்காதிருத்தல்.
- பயன்படுத்திய நீரை மீள சுத்தப்படுத்தி சூழலில் சேர்த்தல்.

**இவ்வாறான செயற்பாடுகள் இரண்டினை முன்மொழிய முடியும். ஒரு செயற்பாட்டிற்கு ஒரு புள்ளி வீதம் இரண்டு புள்ளிகளை வழங்குங்கள். வழங்கப்பட்டுள்ள முன்மொழிவுகளின் பிரயோகத்தன்மை மற்றும் ஆக்கபூர்வத்தன்மையிலும் கவனம் செலுத்துங்கள்.**

**(02 புள்ளிகள்)**

(ஆ)

- நீரியல் வட்டத்தின் செயற்பாடுகள் தடைப்படல்.
- அசுத்தமடைந்த நீரினால் நோய்கள் பரவுதல்.
- நீர்வாழ் அங்கிகள் அழிவடைதல்.
- விவசாய நடவடிக்கைகள் பாதிப்படைதல்.
- தாவர சாகியம் அழிவடைதல்.
- அல்காக்கள் மற்றும் விரும்பத்தகாத தாவரங்கள் பரவலடைதல்.
- சுற்றாடலின் எழில் பாதிப்படைதல்.
- சுத்தமான நீரைப் பெற்றுக்கொள்ள அதிக செலவு ஏற்படல்.

**இவ்வாறான காரணங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்கியிருக்க வேண்டும். குறிப்பிட்டிருப்பின் மாத்திரம் ஒரு புள்ளியை வழங்குங்கள். விளக்கியிருப்பின் முழுப்புள்ளிகளையும் வழங்குங்கள்.**

**(03 புள்ளிகள்)**

**(7ஆம் வினாவுக்கான மொத்தப்புள்ளிகள் 10)**

PAST PAPERS WIKI

WWW.PastPapers.WiKi



[ Downloaded from Past Papers Wiki - Most Extensive Wikipedia of Past Papers! ]


LOL.lk
BookStore
විභාග ඉලක්ක
පහසුවෙන් ජයගන්න
ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න
කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර |
A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත් |
School Book ගුරු අතපොත්
PADANAMA PUBLICATION
pesuru Prakashana Private Ltd.
Akura Pilot
සමනල දැනුම
පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට
www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න